செ.வெ.எண்: 40 நாள்: 21.10.2021

**பெரம்பலூர் மாவட்டத்திற்கான வளம் சார்ந்த வங்கிக்கடன் திட்டம் 2022-23 ஆண்டிற்கு ரூ.4,668 கோடிக்கான திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வளம் சார்ந்த வங்கிக்கடன் திட்டம் 2022-23 ஆண்டிற்கு ரூ.4,668 கோடிக்கான திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2021) வெளியிட்டார்.

**இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்:**

நபார்டு வங்கியானது ஒவ்வொரு ஆண்டும் இந்திய ரிசர்வ் வங்கியின் நெறியின்படி, விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்கள் மேம்படுத்த மாவட்ட வாரியான வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையை 1989 ஆம் வருடம் முதல் தயாரித்து வருகிறது. இந்த வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையில் குறுகிய கால பயிர்கடன் மற்றும் வேளாண் தொழில் சார்ந்த காலக்கடன் ஆகியவற்றின் இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் ரிசர்வ் வங்கியின் புதிய முன்னுரிமை கடன் கொள்கையின்படி, வங்கியின் விவசாய தானிய சேமிப்பு கிட்டங்கிகளுக்கு, உணவக பதனிடு தொழில்களுக்கு, ஏற்றுமதி தொழில்களுக்கு, கல்விக்கடனுக்கு, புதிய வீடுகள் கட்டுதவதற்கு, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு, சுய உதவி குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு கொடுக்கக் கூடிய கடனை இந்த திட்ட அறிக்கையில் நிர்ணக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டங்களை விரைவாக நிறைவேற்றி, வேளாண் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை மேம்படுத்த வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் நபார்டு வங்கியின் 2022-23ம் ஆண்டிற்கான இந்த வளம் சார்ந்த கடன் திட்டமானது கூட்டு பண்ணைய முறையில் விவசாய உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளை கால்நடை வளர்ப்புடன், உள்நாட்டு மீன்வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற தொழில்களிலும், விவசாயம் சாரா தொழில்களிலும் ஈடுபடுத்தி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க செய்தல் வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மொத்த வளம் சார்ந்த கடன் திட்ட மதிப்பீடான ரூ.4668 கோடியில் ரூ.3603 கோடி வேளாண் துறைக்கும், ரூபாய் 389 கோடி சிறு குறு தொழில்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி கல்வி கடனுக்காகவும், வீட்டு கடனுக்காகவும், ஏற்றுமதி கடனுக்காகவும், தனித்தனியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடன்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி சமீபத்தில் மாற்றி அமைத்துள்ளதாகவும், இதில் சிறு குறு விவசாயிகள் மற்றும் குறுந்தொழில்களுக்கு தனியாக இலக்கு வங்கிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நபார்டு வங்கியின் பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.L.S.நவீன்குமார், இந்த அறிக்கையை பற்றி விளக்கும் பொழுது திட்ட அறிக்கை பல அரசு துறைகள், வங்கிகள், துறை சார்ந்த அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் புள்ளி விவரங்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது என விவரித்தார்.

இந்நிகழ்வில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைமை மண்டல மேலாளர் திருமதி சங்கீதா, மண்டல மேலாளர் (தமிழ்நாடு கிராம வங்கி) திருமதி மீரா ராஜன், உதவி பொது மேலாளர் (கனரா வங்கி, திருச்சி மண்டல அலுவலகம்) திரு.கலாக்கர், முன்னோடி வங்கி மேலாளர் திரு.அருள், திட்ட இயக்குநர் (தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) திரு.இராஜமோகன் மற்றும் வங்கி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.